**MCOP. No.7398/2018** **DATE:24.11.2025**

Deposition of Witness : P.W.1

Name : Mr.சுஷ்மிதா

Father/Husband Name : Mr.ராஜேந்திரன்

Age :31

Address :

Cell Phone No. :

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Act 44 of 1969) of the 24th day of September 2025.

---

**மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை**

நான் இம்மனுவில் 2ம் மனுதாரர். நான் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் கூறப்பட்டுள்ள விவரங்கள் என்னால் கூறப்பட்டவைதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். என்னுடைய தரப்பில் பின்வரும் ஆவணங்களைத் தாக்கல் செய்கிறேன்.

| | |
|---|---|
| மசாஆ 1 | முதல் தகவல் அறிக்கை |
| மசாஆ 2 | RC புத்தகம் 1ம் எதிர்மனுதாரர் |
| மசாஆ 3 | காப்பீடு பாலிசி நகல் |
| மசாஆ 4 | மாதிரி வரைபடம் நகல் |
| மசாஆ 5 | இறப்பு அறிக்கை |
| மசாஆ 6 | இறப்பு சான்றிதழ் |
| மசாஆ 7 | ஆதார் கார்டு நகல் –இறந்தவர் புனிதவதி |
| மசாஆ 8 | ஐ.டி கார்டு நகல்– இறந்தவர் புனிதவதி |
| மசாஆ 9 | வாரிசு சான்றிதழ் |
| மசாஆ 10 | ஆதார் கார்டு நகல் 1ம்மனுதாரர் |
| மசாஆ 11 | ஆதார் கார்டு நகல் 2ம் மனுதாரர் |
| மசாஆ 12 | ஆதார் கார்டு |

| | |
|---|---|
| மசாஆ 13 | பேன் கார்டு |
| மசாஆ 14 | பேன் கார்டு |
| மசாஆ 15 | பேன் கார்டு |
| மசாஆ 16 | மருத்துவ பில்கள் |
| மசாஆ 17 | மருத்துவ விடுவிப்பு சீட்டுகள்–அசல் |
| மசாஆ 18 | X–Ray |
| மசாஆ 19 | வங்கி கணக்கு புத்தகம் –இறந்தவர் புனிதவதி |
| மசாஆ 20 | இறுதி பார்ம் ரிப்போர்ட் |

அவை மசாஆ 1 முதல் 20 வரை குறியீடு செய்யப்படுகின்றன. மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன். மசாஆ 6 2 வது எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.

**2 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்தினை நீங்கள் நேரில் பார்க்கவில்லைஎன்றால் சரிதான். உங்கள் தாயார் சாலையை கடக்கும் போது தான் விபத்து நடைபெற்றது என்றால் சரியல்ல. அந்த இடத்தில் சாலையை கடக்ககூடிய இடம் இல்லை என்றால் சரியல்ல. உங்கள் தயார்தான் சாலையை கடக்க்கூடாத இடத்தில் தடீர்என்று சாலையை கடக்க முயற்சி செய்யும்போது தான் இந்த விபத்து ஏற்ப்பட்டது என்றால் சரியல்ல. மசாஆ 20 ன்படி முதல் எதிர் மனுதாரரின் வாகனத்தை ஓட்டிய ஒட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. முதல் எதிர் மனுதாரரின் ஓட்டுநர் தகுந்த ஒட்டுநர் உரிமம் இல்லாமல், காப்பீடு விதிமுறைகளை மீறி இருசக்கரவாகனத்தை ஓட்டி இந்த விபத்தை ஏற்ப்படுத்தி உள்ளதால் 2 ம் எதிர்மனுதாரர் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. அடிப்பட்டவுடன் உங்கள் தாயார் எந்த மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்றால் போஸ் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டார். அவர் சிகிச்ை‍ச எடுத்ததற்கான விபத்து பதிவேட்டு நகல் நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பின்னிட்டு உங்கள் தாயார் எந்த மருத்துவமனையில் எந்த தேதியில் சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்றால் ரெயில்வே மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தார். ரெயில்வே மருத்துவமனையில்3 அல்லது 4 நாட்கள் உள்நோயாளியாக இருந்தார்.

அதன் பிறகு விட்டிற்கு வந்துவிட்டாரா என்றால் இல்லை. செட்டிநாடு மருத்துவமணையில் சேர்ந்தார். அந்த மருத்துவமணையில் ஒருவாரம் சிகிச்சை எடுத்துக்கொண்டார். அதன் பிறகு செட்டிநாடு மருத்துவமணையில் இருந்து விடுவிக்கப்பட்டார். உங்கள் தாயாருக்கு இந்த விபத்தினால் ஏற்ப்பட்ட காயங்கள் பூரணமாக குணமடைந்து விட்டதால் தான் மருத்துவமணையில் இருந்து விடுவிக்கப்பட்டார் என்றால் இல்லை அவர் முழுவதுமாக குணமடையவில்லை. உங்கள் தாயார் குணமடையாமலே மருத்துவமணையில் இருந்து விடுவிக்கப்பட்டார் என்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மசாஆ 17 டிஸ்சார்ஜ் சம்மரியல் உங்கள்தாயார் விபத்தினால் ஏற்ப்பட்டகாயங்களுக்கு சிகிச்சை எடுத்துக்கொள்ளவில்லை என்றும் அவருக்கு சிறுநிரக செயலிழப்பு மற்றும் தொற்று இருந்ததால் அதற்காக சிகிச்சை எடுத்துக்கொண்டுள்ளார் என்றும் மசாஆ 17 க்கும் இந்த விபத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றும் அதனால் மசாஆ 16 உள்ள மருத்துவ பில்களை நீங்கள் பெற உரிமை உடையவர் அல்ல என்றால் சரியல்ல. மசாஆ 16 பிலகள் அனைத்தும் உ்ங்கள் தாயார் டயாலிசிஸ் செய்ததற்காக செலுத்தப்பட்ட பில்கள் என்றும் அதனால் அதில் குறிப்பிட்டுள்ள தொகையை நீங்கள் பெற உரிமை உடையவர் அல்ல என்றால் சரியல்ல. மசாஆ 16 மருத்துவ பில்கள் நஷ்டஈடை அதிகப்படுத்தி பெற வேண்டும் என்பதற்காக உங்களால் தயாரிக்கப்பட்டது என்றும் அந்த ஆவணத்திற்கும் உங்களுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. மசாஆ 16 உள்ள தொகையை நீங்கள்மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் மூலம் பெற்றுவிட்டிர்கள் என்றால் சரியல்ல. உங்கள் தாயாரின் வயது, தொழில், வருமானம் குறித்த ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உங்கள் தந்தை என்ன வேலை செய்கிறார் என்றால் தென்னக ரயில்வேயில் பணி செய்து 2016 ம் வருடம் பணி ஓய்வு பெற்றுவிட்டார். என் தாயார் இறப்பதற்கு 10 நாட்களுக்கு முன்பு என் தந்தை இறந்து விட்டார். உங்கள் தாயார் பென்சன் வாங்கினார் என்றால் இல்லை. உங்கள் தாயார் இறந்ததற்கான பிணக்கூறாய்வ அறிக்கையை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

உங்கள் தாயார் இறந்ததற்கும் இந்த விபத்திற்கும் சம்பந்தம் இல்லை என்பதால் இந்த மனு நிலைநிற்க்கதக்கதல்ல என்றும் உங்கள் மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை–** இல்லை.

x

என்னால் தட்டச்சருக்கு திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவர் சரி என ஒப்புக்கொண்ட பின்பு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.

தேதி:24.11.2025.

**Sd/– R.Jagadeesan**
3 ஆம் நீதிபதி
சிறுவழக்குகள் நீதிமன்றம்.